

# ஆவியினால் நடத்தப்படுங்கள்

J. சாம் ஜெபத்துரை

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# ஆவியினாலே நடத்தப்படுங்கள்!

(BE LED BY THE SPIRIT)

A. Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 006.
Tamil Nadu

11/1/92

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்

J. சாம் ஜெபத்துரை

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : மே 1991
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 224

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# அர்ப்பணம்

பரிசுத்த ஆவியை வாக்கு பண்ணினவரும்
பரிசுத்த ஆவியை உள்ளத்தில் ஊற்றுகிறவரும்
பரிசுத்த ஆவியினால் வழிநடத்துகிறவருமான
என், அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கே
இந்நூலை அர்ப்பணிக்கிறேன்!

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆவியினால் நடத்தப்படுங்கள்! | 5 |
| 2. | அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்! | 9 |
| 3. | ஆவியினாலே பிறப்பது...! | 12 |
| 4. | ஆவியினாலே பேசுங்கள்! | 15 |
| 5. | ஆவியால் கட்டப்படுங்கள்! | 18 |
| 6. | ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுங்கள்! | 21 |
| 7. | பயமுள்ள ஆவி அல்ல! | 24 |
| 8. | சுத்தவானாகக் காத்துக்கொள்! | 27 |
| 9. | எதைச் செய்தாலும்...! | 30 |
| 10. | நம்பிக்கை இல்லை! | 33 |
| 11. | மங்கியெரிகிற திரி! | 36 |
| 12. | அந்த வார்த்தைகள்! | 39 |
| 13. | வேறுபாட்டின் உபதேசம்! | 42 |
| 14. | ருசித்துப் பாருங்கள்! | 45 |
| 15. | பரம ஈவு! | 48 |
| 16. | முதிர்வயதிலும் பெலன்! | 51 |
| 17. | தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்! | 54 |
| 18. | மூன்று சோதனைகள்! | 58 |
| 19. | பரீட்சைக்கு நில்லுங்கள்! | 61 |

அத்தியாயம் 1

# ஆவியினால் நடத்தப்படுங்கள்!

''எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' (ரோமர் 8:14).

சிலர் தங்களுடைய வாழ்க்கையை தாங்களே நடத்திச் செல்ல விரும்புகிறார்கள்.

சிலருடைய வாழ்க்கையில் சாத்தான் புகுந்து, அவர்களுடைய சிந்தனைகளைத் திருப்பி தான் விரும்புகிற பிரகாரம் அவர்களை நடத்துகிறான்.

ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையோ வேத வசனங்களின்படி கிறிஸ்துவினாலும் ஆவியானவரினாலும் நடத்தப்படுகிற மேன்மையான அனுபவமாய் இருக்கிறது!

ஒருவன் வெறும் இரட்சிப்பை மட்டும் பெற்றுக்கொண்டால் போதாது; பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டாலும் போதாது. அவன் தேவனுடைய ஆவியினால் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் தான் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள் என்று வேதம் தெளிவாக சொல்லுகிறது.

ஆவியானவர் நாம் நடக்க வேண்டிய வழியை மெல்லிய குரலில் நம் உள்ளத்தின் ஆழத்தில் அருமையாய் பேசுகிறார்.

நம்மேல் தம் கண்ணை வைத்து நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். நாம் நடக்க வேண்டிய வழியை நமக்கு போதிக்கிறார்

ஆகவே நம்முடைய ஆவிக்குரிய செவிகள் ஆவியானவரின் குரலைக் கேட்க எப்பொழுதும் ஆயத்தமுள்ளவைகளாகவும் கவனம் உள்ளவைகளாகவும் இருக்க வேண்டியது அவசியம்!

எப்பொழுதுமே கர்த்தர் சத்தமாய் பேசுவார் என்று எண்ணிவிடக் கூடாது. ''சாமுவேலே, சாமுவேலே'' என்று கூப்பிட்டார். தானியேலே, தானியேலே என்று அழைத்தார். என்றாலும் எல்லா வேளைகளிலும் அப்படித்தான் பேசுவார் என்று நினைக்கக்கூடாது.

ஆண்டவர் சூழ்நிலைகளின் மூலமாகவும் பேசுவார்; இயற்கையின் மூலமாகவும் பேசுவார். வேத வசனங்களை வாசிக்கும்போதே சில வசனங்கள் நம்முடைய உள்ளத்தில் ஆழமாய் பதிந்துவிடும். அந்த வசனத்தின் மூலமாய் நாம் நடக்க வேண்டிய வழியை நமக்குக் காண்பிப்பார்.

ஒரு நாள் ஆவியானவர் மெல்லிய குரலில் பிலிப்புவைப் பார்த்து, ''நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள்'' என்று சொன்னார் (அப் 8:29).

பிலிப்பு பார்த்தபோது அங்கே எத்தியோப்பிய மந்திரி தன் இரதத்திலே தன் ஊருக்கு திரும்பிக்கொண்டிருந்தான். அவனுடைய கையிலே ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமம் இருந்தது.

ஆவியானவரோ அந்த மந்திரியோடு இடைப்படும்படி விரும்பினார். ஆகவேதான் பிலிப்போடுகூட மெல்லிய குரலில் பேச சித்தமானார்.

பிலிப்புவுக்கு ஆவியானவருடைய குரலைக்கேட்க பிரியமில்லாமல் இருந்திருந்தாலோ, அல்லது ஆவியினால் வழிநடத்தப்பட தன்னை ஒப்புக்கொடுக்காமல் இருந்திருந்தாலோ அந்த எத்தியோப்பிய மந்திரியை கர்த்தருக்குள் வழிநடத்தி இருந்திருக்க முடியாது.

சமீபத்தில் நான் இஸ்ரவேல் தேசத்திற்கு போன போது, அங்கே அநேக எத்தியோப்பியருடைய ஆலயங்களைப் பார்த்தேன்.

விசேஷமாக, இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்று சொல்லப்படுகிற இடத்தில் எத்தியோப்பியருடைய பழங்காலத்து சிறு ஆலயம் இருந்தது.

அந்த ஆலயத்தைப் பார்த்தவுடன் என் உள்ளத்தில் வந்த முதல் எண்ணம் எது தெரியுமா?

பிலிப்பு ஆவியானவருடைய சத்தத்திற்கு செவி கொடுத்து எத்தியோப்பிய மந்திரியை சந்தித்ததின் விளைவாக இன்றும் எத்தியோப்பியர் கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆலயம் அங்கே நின்று கொண்டிருக்கிறது என்பதுதான்.

ஆம், பிலிப்பு ஆவியானவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தபடியினால் வந்த விளைவுகளையும் மேன்மைகளையும் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் பார்க்கக் கூடியதாய் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுருவைப் பாருங்கள். அப்போஸ்தலர் 10:19,20-ம் வசனத்திலே ஆவியானவர் பேதுருவினிடத்திலே, ''இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்''

அன்று பேதுரு அந்த ஆவியானவருடைய சத்தத்திற்கு செவிசாய்த்து கீழ்ப்படிந்ததினாலே கொர்நேலியுவும் அவனுடைய வீட்டார் அனைவரும் கிறிஸ்துவுக்குள் வந்தார்கள், இரட்சிக்கப்பட்டார்கள், ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டார்கள்.

தேவபிள்ளையே, தேவ ஆவியானவருக்கு செவி கொடு. உன் ஊழியம் ஆசீர்வாதமாக இருக்கும்.

''ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை''
(ரோமர் 8:1).

# அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

''கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்'' (லூக் 4:18).

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நிறைவாய் பெற்றுக் கொள்ளுங்கள்.

அந்த அபிஷேகம் உங்களை கிறிஸ்துவின் சாயலில் மறு ரூபமாக்குகிறது.

அந்த அபிஷேகம் சாத்தானின் சகல வல்லமையையும் மேற்கொள்ள உங்களுக்கு பெலன் கொடுக்கிறது.

கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பாருங்கள். லூக். 4-ம் அதிகாரம் முதலாம் வசனத்தில் ''பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர் எப்பொழுதும் ஆவியிலே நிறைந்தவராய் இருந்தார். பொங்கி வழிகிற ஆவியின் அனுபவம் அவருக்கு இருந்தது.

தேவன் அவருக்கு பரிசுத்த ஆவியின் வல்லமையை அளவில்லாமல் கொடுத்திருந்தார்.

தேவபிள்ளையே, கிறிஸ்துவின் பிள்ளைகளாய் இருக்கிற நாம் ஒருபோதும் பரிசுத்த ஆவியின் நிறைவில் குறைவுள்ளவர்களாய் இருக்கவே கூடாது.

நாம் அபிஷேகம் பெற்றுக்கொண்டோம் என்கிற அனுபவம் நமக்குப் போதாது. அந்த அபிஷேகத்திலே தேவ ஆவியிலே நிறைந்தவர்களாய் காணப்படவேண்டும்.

பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வது ஒரு சம்பவம். ஆனால் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பது அநுதின

அனுபவம். பரிசுத்த ஆவியினால் நிரம்பி வழிந்து மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாய் வாழுவது மகிமையான ஊழியம்.

யோவான் ஸ்நானகனை கவனித்துப் பாருங்கள்! அவன் தாயின் கர்ப்பத்திலேயே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவனாய் இருந்தான் (லூக் 1:15).

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதையும் நிரம்பி வழிவதையும் கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணி இருக்கிறார். மேல் வீட்டறையிலே காத்திருந்த சீஷர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள் (அப் 2:4).

பேதுருவும் அந்த நாளில் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார். அப் 4:8-ஐ வாசியுங்கள். திரும்பவுமாக பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டதை வாசிக்கிறோம்.

அப் 4:33-ஐ வாசித்துப் பார்த்தால், பேதுருவும் அவனோடுகூட ஜெபித்துக்கொண்டிருந்த சீஷர்களும் திரும்பவுமாக பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்.

அப் 7:55-ஐ வாசித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்ட ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிரம்பி காட்சியளிக்கிறதை அங்கே பார்க்கலாம்.

அப் 11:25-லே பர்னபாவைக் குறித்து நாம் வாசிக்கும்போது அவரும் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் இருந்தார்.

அப் 13:9-லே அப்.பவுலும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய் இருந்ததை வாசிக்கலாம்.

தேவபிள்ளையே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுகிறது மாத்திரமல்ல, ஒவ்வொரு நாளும் தேவ சமுகத்திலே அமர்ந்திருந்த, ஸ்தோத்திரம் பண்ணி ஜெபம்பண்ணி பரிசுத்த ஆவியின் வரங்களையும் வல்லமை

யையும் அனல்மூட்டி எழுப்பி, ஆவியிலே நிறைந்தவர்களாகவும் நிரம்பி வழிகிறவர்களாகவும் காணப்படவேண்டும்.

என் பாத்திரம் நிரம்பி வழிந்துகொண்டே இருக்கிறது என்பதே நம்முடைய சாட்சியாய் இருக்கட்டும்!

ஆதி அப்போஸ்தலருடைய அனுபவங்கள் நமக்கு முன்மாதிரியாய் இருப்பதாக!

அவர்கள் பரிசுத்த ஆவியின் நிறைவினாலே ஜெபித்தார்கள்.

பரிசுத்த ஆவியின் நிறைவினாலே பிரசங்கித்தார்கள்.

பரிசுத்த ஆவியின் நிறைவினாலே ஆவியின் வரங்களையும் வல்லமைகளையும் வெளிப்படுத்திக் காண்பித்தார்கள்.

பரிசுத்த ஆவியின் நிறைவினாலே அந்தகார சக்திகளை மேற்கொண்டார்கள்

அப் பவுல் எழுதுகிறார்: ''சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும், உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'' (எபே 5:19,20).

தேவபிள்ளையே, நீ பெற்றிருக்கிற இந்த அபிஷேகமானது உன்னை மகிமையின்மேல் மகிமையடையச் செய்வதாக! கிறிஸ்துவின் சுபாவத்தை உனக்குள் கொண்டு வருவதாக!

எக்காள சத்தம் தொனிக்கும்போது உன்னை இந்த அபிஷேகம் கிறிஸ்துவின் சாயலில் மறுரூபமாக்கட்டும்!

''நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்'' (எபே 3:16).

# ஆவியினாலே பிறப்பது...!

''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்'' (யோவான் 3:6).

'ஆவியினால் பிறப்பது' என்ற வார்த்தையை சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் ஆவிக்குரிய கர்த்தருடைய குடும்பத்தில் பிறக்க வேண்டுமென்று கர்த்தர் மிகவும் விரும்புகிறார்.

நாம் ஆவியினால் பிறக்காவிட்டால் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. நாம் ஆவியினால் பிறக்க வேண்டுமென்றால் ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் இந்த உலகத்தில் தாயின் வயிற்றில் பிறக்கும் போது ஆதாமின் சுபாவங்களைப் பெறுகிறோம்; பாவ சுபாவங்களைப் பெறுகிறோம்.

தாய் நம்மை பாவத்தில் கர்ப்பம் தரித்தபடியினாலே ஜென்ம பாவங்கள் நம்மோடுகூட வருகிறது; பாவ சுபாவங்கள் நமக்குள் கிரியை செய்கிறது.

ஆனால் நாம் மனந்திரும்பி, நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு மறுபடியும் பிறக்கும்போது கர்த்தருடைய குடும்பத்தில் வருகிறோம். பரலோக தேவனுடைய பிள்ளைகளாய் மாறுகிறோம்.

வேதம் சொல்லுகிறது: ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.''

அநேகருக்கு மறுபடியும் பிறப்பது என்றால் என்ன என்று தெரியவில்லை. அதிலும் ஆவியினால் பிறப்பது என்ன என்று தெரியவில்லை.

பெரிய வேத பண்டிதராயிருந்த நிக்கொதேமுவைப் பார்த்து இயேசு சொன்னார், "நீ இஸ்ரவேலில் போதகனா யிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?"
(யோவான் 3:10).

இயேசு சொன்னார், "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்ட மான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட் கிறாய்.

ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென் றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவான் 3:7,8).

இயேசு ஆவியினால் பிறந்தவனை காற்றுக்கு ஒப்பிட்டுப் பேசுவதை பார்க்கிறோம். காற்றை நம்மால் காண முடி யாமல் போனாலும் அதனுடைய அசைவை நாம் உணரு கிறோம். காற்றின் போக்குகளை மூளை அறிவினால் முழுவது மாக உணர்ந்துகொள்ள முடியாது.

அது எங்கேயிருந்து புறப்படுகிறது? எந்தத் திசையை நோக்கச் செல்லுகிறது? காற்று எங்கு எங்கெல்லாம் சுழன்று திரும்புகிறது என்பது நமக்குத் தெரியாது.

ஆனால் காற்றிலே ஒரு வல்லமை இருக்கிறது என் பதையும், காற்று பல விதங்களிலே செயல்படுகிறது என் பதையும் நம்மால் அறிந்துகொள்ளமுடியும்.

பரிசுத்த ஆவியாகிய காற்று பரலோகத்திலிருந்து வீசுகிறது பரிசுத்த ஆவியினால் அபிஷேகத்தை சீஷர்கள் பெற்றுக்கொண்டபோது, "பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதை யும் நிரப்பிற்று" என்று அப் 2:2-ல் நாம் வாசிக்கிறோம்.

அந்தக் காற்று பரலோகத்திலிருந்து வீசிய காற்று! விசுவாசிகளின் ஆவியிலே வீசின காற்று அந்த காற்று.

அது அவர்களுக்குள் ஒரு புதிய மறுபிறப்பின் அனுபவத்தைக் கொண்டுவந்தது. அன்று அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டார்கள்.

காற்றை மற்றவர்களுடைய மூளை அறிவினால் அறிந்துகொள்ள முடியாததைப்போல, அன்று சீஷர்கள் பெற்ற அபிஷேகத்தை அவர்களைச் சூழ்ந்திருந்த உலகத்தால் அறிந்துகொள்ள முடியவில்லை.

அவர்கள் குடித்து வெறித்திருக்கிறார்கள் என்றே எண்ணினார்கள் ஆனால் சீஷர்களோ தாங்கள் உன்னத பெலத்தினாலும் உன்னத கிருபையினாலும் நிரப்பப்பட்டதை அறிந்திருந்தார்கள்.

தேவபிள்ளையே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நீ எப்படியும் பெற்றுக்கொள்ள வேண்டும் கர்த்தர் அதை உனக்கு வாக்களித்திருக்கிறார் அல்லவா?

கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று வேதம் சொல்லுகிறது.

நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கிறது போலவே, பரம பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்க அறிந்திருக்கிறார்.

நிச்சயமாகவே அவர் உனக்கு பரிசுத்த ஆவியைத் தந்தருளுவார்.

''என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்'' (லூக் 24:49).

# ஆவியினாலே பேசுங்கள்!

"அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான்" (I கொரி 14:2).

குழந்தை பிறக்கும்போது ஒரு மகிழ்ச்சி! குழந்தை பேச ஆரம்பிக்கும்போது இன்னொரு மகிழ்ச்சி.

உலகத்திலே மிக இனிமையான குரல் உண்டென்றால் குழந்தைகள் பேசும் மழலைக் குரல்தான் அது!

"குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்கிறார் வள்ளுவர்.

கர்த்தருடைய குடும்பத்திலுள்ள பிள்ளைகளாகிய நாம் அந்நிய பாஷையில் பேசும்போது கர்த்தருடைய உள்ளமெல்லாம் மகிழ்ந்து களிகூருகிறது.

அந்நிய பாஷை என்பது பரலோகத்தின் பாஷை. சில வேளைகளில் அது தேவனோடு பேசும் பல்வேறு உலக பாஷைகளாகவும்கூட இருக்கக்கூடும்.

வேதம் சொல்கிறது: அந்நிய பாஷையிலே பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும் அவன் தேவனிடத்தில் பேசுகிறான்.

குழந்தைகள் பேசும் மழலை, வெளியில் இருந்து வருகிறவர்களுக்கு ஒருவேளை புரியாத புதிராகவும் இரகசியமாகவும் இருக்கக்கூடும்.

ஆனால் பெற்றோருக்கு அது அருமையாகப் புரியும். அதுபோலத்தான் நாம் அந்நிய பாஷையிலே பேசுகிறது சாத்தானுக்கு புரியாததாய் இருக்கும். ஆனால் கர்த்தருக்கு அது வெட்ட வெளிச்சமாக, இனிமையானதாக இருக்கும்.

அந்நிய பாஷையிலே நீண்ட நேரம் பேசுவதும் அந்நிய பாஷையிலே ஜெபித்துக்கொண்டிருப்பதும் நமக்குள்ளே ஒரு பெரிய ஆவியின் மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது; தேவ பிரசன்னத்தைக் கொண்டுவருகிறது; ஒரு ஆத்தும திருப்தியை நம்முடைய ஆத்துமாவிலே கொண்டுவருகிறது; நம்முடைய உள்ளம் பொங்கித் துள்ளுகிறது.

மட்டுமல்ல, நாம் ஆவியிலே பேசும்போது நம்மை அறியாமல் அது நமக்குள் ஒரு பக்திவிருத்தியை உண்டாக்குகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், அந்நிய பாஷையிலே பேசுகிறவன் தனக்குத்தானே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.

நாம் கொஞ்ச நேரம் அந்நிய பாஷையில் நிரம்பி பேசிக்கொண்டிருப்பதினால், நம்மை அறியாமலே நமக்குள்ளே ஒரு பக்திவிருத்தி உண்டாகிறது. நமக்குள்ளே ஒரு தெய்வீக அன்பு உண்டாகிறது. கர்த்தர்மேல் அளவில்லாத நேசம் உண்டாகிறது. ஒரு பெரிய ஆறுதலும் தேறுதலும் உண்டாகிறது.

நாம் ஆவியிலே நிரம்பி பேசும்போது நம்மை அறியாமலே ஆவியின் வரங்கள் நமக்குள் கிரியை செய்ய ஆரம்பித்துவிடுகிறது

வேதம் சொல்லுகிறது: "ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வரமும்,

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும்,

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,

வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும்,
வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும்,
வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும்,
வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது'' (I கொரி 12:8 1-10).

தேவபிள்ளையே, ஆவியின் வரங்கள் உனக்கு மிகவும் அவசியம். இந்த வரங்கள் இருந்தால்தான் கர்த்தரே தெய்வம் என்று நிரூபிக்க முடியும்.

இந்த வரங்கள் இருந்தால்தான் சாத்தானின் கட்டுகளைத் தகர்த்து எறிய முடியும்.

இந்த வரங்கள் இருந்தால்தான் ஆத்துமாக்களைக் கர்த்தருக்கென்று ஆதாயம் செய்ய முடியும். ஆகவே ஆவியினாலே நிரம்பி அந்நிய பாஷையிலே பேசுவாயாக!

ஆவியினாலே நிரம்பி பேசும்போது நம்மை அறியாமல் பரிசுத்த ஜீவியம் நமக்குள் வருகிறது. ஆவியினாலே நிரம்பி பேசும்போது பரலோகமும் நமக்காக திறக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த பாதையிலே நம்மை வழிநடத்திச் செல்லுகிறார்!

அசுத்தங்களின்மேல் ஒரு வெறுப்பு உண்டாகிறது. உலக இச்சைகளின்மேல் ஒரு வெறுப்பு உண்டாகிறது. நாம் பரிசுத்த ஜீவியத்திலே முன்னேறிச் செல்லுவதற்கு நமக்கு வைராக்கியமும் கிருபையும் கிடைக்கிறது

''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்'' (அப் 2:4).

# ஆவியால் கட்டப்படுங்கள்!

''அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்''
(எபே 2:22).

முழு கிறிஸ்தவ வாழ்க்கையும் ஒரு பெரிய ஆவிக்குரிய மாளிகையாய் இருக்கிறது. கிறிஸ்துதாமே அதற்கு மூலைக் கல்லாய் இருக்கிறார். அந்த மூலைக்கல்லின்மேல் நாம் அருமையாய் கட்டப்பட்டு எழும்புகிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், ''நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்.

அதற்கு இயேசு கிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.

அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்''
(எபே 2:19-22)

அவருடைய பெரிய மாளிகையிலே நாம் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய கற்களாக காணப்படுகிறோம்.

ஒவ்வொரு கல்லும் இசைவிணைப்பாய் இணைக்கப்பட்டு ஒன்றுக்கொன்று பொருந்தி, ஒன்றையொன்று தாங்கி ஒரே கட்டடமாய் பூரணமாய் எழுப்பப்படுகிறது.

அந்த கட்டடத்தின் மேன்மை அதிலுள்ள கற்கள் இசைவாய் இணைக்கப்படுவதில் இருக்கிறது.

அந்த கட்டடத்தின் அழகு அதன் பூரணத்தில் இருக்கிறது.

ஆவியானவர் நம்மை அழகாக, பெலனாக, உறுதியாக, மேன்மையாக கிறிஸ்துவோடும் அவருடைய ஊழியக்காரரோடும் விசுவாசிகளோடும் இணைத்துக் கட்டி எழுப்பிக் கொண்டு வருகிறார்.

எந்த விசுவாசியாலும் தனித்து இயங்க முடியாது. எந்த ஊழியக்காரனாலும் சுயாதீனமாய் சென்றுகொண்டிருக்க முடியாது!

நாம் ஒரே சரீரத்தின் அவயவங்களாய் இருக்கிறோம். ஒரே மாளிகையின் பல்வேறு கற்களாய் இருக்கிறோம்.

எந்தக் கல்லும் தனித்து செயல்பட முடியாததுபோல எந்த அவயவமும் தனித்து செயல்பட முடியாது.

நாம் பல்வேறு சபைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாய் இருக்கலாம். ஆனாலும் நம்மை இணைக்கிற ஆவியானவர் ஒருவரே!

உலகமெங்கும் பரந்து விரிந்து கிடக்கக்கூடிய கர்த்தருடைய பெரிய குடும்பத்திலுள்ள கோடானகோடி விசுவாசிகளை அந்த ஆவியானவர் ஒரே மாளிகையாக இணைத்துவிடுகிறார்.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை இசைவாய் இணைக்கவும், உன் ஆவிக்குரிய ஜீவியத்தை கட்டி எழுப்பவும் நீ உன்னை ஒப்புக்கொடுப்பாயா?

ஒரு மாளிகையிலே பல கதவுகள், ஜன்னல்கள் இருக்கலாம்; பல தூண்கள் இருக்கலாம். அவைகள் ஒன்றொடொன்று உன்னைப் பார்க்கிலும் நான் திறமையுள்ளவன், என்னைப் பார்க்கிலும் நீ தாழ்ந்தவன் என்று சொல்ல முடியாது.

நீ நாணுய் இருக்கும்படி அழைக்கப்பட்டிருந்தால் ஜன்னலைப் பார்த்து குறைகூற வேண்டாம். ஜன்னல் ளாக அழைக்கப்பட்டிருந்தால், கதவைப் பார்த்து கே செய்ய வேண்டாம்

அதுபோலவே ஊழியங்களிலே பல வித்தியாசங்கள் உண்டு! எல்லோரும் அப்போஸ்தலராகிவிட முடியாது சுவிசேஷகராகிவிட முடியாது.

கர்த்தர் ஒவ்வொருவரையும் ஒரு நோக்கத்தோடுகூட அழைத்திருக்கிருர். அழைத்த அழைப்பிலே நிலைநி கும்போது நாம் மேன்மையுள்ளவர்களாய் இருப்போம்

அப்போஸ்தலனுகிய பவுல் எழுதுகிருர், ''நாம் யூதரா யினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீன ராயினும் எல்லோரும் ஒரே ஆவியினுலே ஒரே சரீரத்தி குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்''

(I கொரி 12:13)

கர்த்தர் உன்னை எந்த இடத்தில் அழைத்திருக்கிருரோ அந்த இடத்திலே ஆவிக்குரிய மாளிகையின் அழகாக நீ காணப்பட வேண்டும். இசைவிணைப்பாய் இணைக்கப் பட்டு இருக்க வேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய அழகு அன்பு, சமாதானம், சாந்தம், பொறுமை, இச்சையடக்கமாகும்.

நம்முடைய குணுதிசயங்கள் ஒருவருக்கொருவர் பொருந்தி, விட்டுக் கொடுத்து. ஒருவருடைய பாரத்தை இன்னெருவர் சுமப்பதில் இருக்கிறது.

''நம்பிக்கையினுலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடா யிருப்போம்'' (எபி 3:6).

# ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுங்கள்!

''கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படவேண்டும்'' (II தெச 2:13).

நாம் ஆவியினாலே பிறக்க வேண்டும்; ஆவியானவர் தரும் வார்த்தைகளைப் பேச வேண்டும். ஆவியானவரால் நடத்தப்படவேண்டும். மட்டுமல்ல, ஆவியானவரினாலே பரிசுத்தமாக்கப்பட வேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியம் செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடைந்து கொண்டேயிருக்க வேண்டும்.

தன்னை சுத்திகரித்துக்கொண்டு, கிறிஸ்து தனக்கு முன் வைத்திருக்கும் அந்த பரிசுத்த பாதையிலே முன்னேறிச் சென்று கொண்டேயிருக்க வேண்டும்.

கர்த்தருடைய மகிமையான வருகையிலே பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைந்து, மகிமையின்மேல் மகிமை பெற்று கிறிஸ்துவினுடைய சாயலில் மறுரூபமாகவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்: ''சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக'' (I தெச 5:23)

பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லை. பரிசுத்தமில்லாமல் இரண்டாவது வருகையிலே கர்த்தர் மத்திய ஆகாயத்தில் வருவதைக் காணவும் முடியாது, எடுத்துக் கொள்ளப்படவும் முடியாது.

நமக்கு பரிசுத்தத்தைத் தரும்படி கர்த்தர் வைத்திருக்கிற காரியங்கள் மூன்றுண்டு.

முதலாவது கிறிஸ்துவின் இரத்தம்.

இரண்டாவது தேவனுடைய வசனம்.

மூன்ருவது பரிசுத்த ஆவியானவர்.

இந்த மூன்றின் மூலமாக கர்த்தர் நம்மை பரிசுத்தப்படுத்துகிருர்.

சரி, நாம் செய்ய வேண்டியது என்னவென்று நீங்கள் ஒருவேளை கேட்கலாம்.

ஆம், நாம் நம்மை முழுவதுமாக பரிசுத்த வாழ்க்கைக்கு அர்ப்பணிக்க வேண்டும். பரிசுத்தத்தின்மேல் இடைவிடாத தாகமும் வாஞ்சையும் நம்முடைய உள்ளத்தில் எழுந்து கொண்டேயிருக்க வேண்டும்.

அவ்வப்போது நம்மை தேவ சமுகத்திலே நிறுத்தி குறை குற்றங்களை நீக்கி சுத்திகரித்துக்கொள்ள வேண்டும்.

மட்டுமல்ல, நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை பரிசுத்தத்திற்காக பிரதிஷ்டை செய்துவிட வேண்டும்.

அப்போஸ்தலனுகிய பவுல் எழுதுகிருர்: ''நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்'' *(ரோமர் 12:1)*.

ஆம், நம்முடைய சரீரத்தை நாம் பரிசுத்தத்திற்கென்று ஒப்புக்கொடுக்க வேண்டும். காரணம் என்ன தெரியுமா?

நம்முடைய சரீரமே கர்த்தருடைய ஆலயமாய் இருக்கிறது. பரிசுத்தமுள்ள தேவன் நம்முடைய சரீரத்திலே வாசம் பண்ண விரும்புகிருர்.

ஆகவே உங்களுடைய சரீரத்தைக் குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள். கறைப்படுத்தாத புதிய இடத்திற்கு உங்களுடைய சரீரத்தை நடத்திச் செல்லவேண்டும்.

உலகத்தின் ஆசாபாசங்களுக்கும் மனமும் மாம்சமும் விரும்புகிற காரியங்களை நிறைவேற்றுவதற்கும் உங்களுடைய அவயவங்களை விற்றுப்போட வேண்டாம்.

உலகம் அசுத்தத்திற்குள் கிடக்கிறது. ஜனங்கள் இரகசிய பாவங்களுக்குள் விழுந்து, தங்களைத் தாங்களே தீட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தேவபிள்ளையே, கர்த்தர் இந்த பூச்சக்கரத்திலுள்ள சகல ஜனங்களிலும் உன்னை தனக்கென்று நியமிக்கப்பட்ட பரிசுத்த ஜனமாய் தெரிந்துகொண்டிருக்கிறார்.

நீ வேறு பிரிக்கப்பட்டவன், கிறிஸ்துவின் இரத்தத்தால் சுழுவப்பட்டவன், கிறிஸ்துவினுடைய வாக்குத்தத்தங்களுக்கும் கிருபைகளுக்கும் உடன் சுதந்தரவாளன். ஆகவே உன் சரீரத்தை பரிசுத்தத்தோடு பாதுகாத்துக் கொள்.

தேவபிள்ளையே, உன்னுடைய மாம்ச இச்சைகளை சிலுவையிலே அறைந்துவிட்டு, உன்னுடைய அவயவங்களை கர்த்தருக்கென்று அர்ப்பணித்துவிடு.

இனி நானல்ல, கிறிஸ்துவே என்னிலே ஜீவிக்கிறார் என்று சொல்ல வேண்டுமானால், உன்னுடைய சரீர அவயவங்களை சிலுவையிலே அறையப்பட ஒப்புக்கொடுப்பது மிகவும் அவசியம்.

அப்போது ஆவியானவராலே நீங்கள் பரிசுத்தமாக்கப்படுவீர்கள்.

''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?'' (ரோமர் 6:19).

# பயமுள்ள ஆவி அல்ல!

''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (II தீமோ 1:7).

டெரி மைஸ் என்ற போதகரைக் குறித்த ஒரு சாட்சியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அவர் ஒரு நாள் வெளிதேசம் ஒன்றிற்கு தன் ஊழியத்திற்கான எல்லா உபகரணங்களை ஏற்றிக்கொண்டு தன் காரில் சென்றபோது, ஒருவன் எதிர்பாராத விதமாக அந்தக் காரை நிறுத்தினான்.

''ஐயா, நான் அவசரமாய் அடுத்த கிராமத்திற்கு போக வேண்டியதிருக்கிறது. என்னை தயவுசெய்து காரில் ஏற்றிக்கொள்வீர்களா?'' என்று கெஞ்சிக் கேட்டான்.

அவரும் மனதுருகி தன்னுடைய காரிலே ஏற்றிக் கொண்டார். மிகவும் சாதுவாய் பரிதாபமாய் ஏறினான்.

அந்த கார் ஊரைக் கடந்து தனியான இடத்தில் சென்றுகொண்டிருந்தபோது, திடீரென்று அவன் தன் துப்பாக்கியை அவருக்கு நேராக நீட்டினான்.

''மரியாதையாய் உன்னிடத்திலுள்ள எல்லாவற்றை யும் எனக்கு கொடுத்துவிடு'' என்று பயங்கரமாய் மிரட்டவும் ஆரம்பித்தான்!

ஒரு நிமிடம் அவருக்கு பயமும் நடுக்கமுமாய் இருந்தது. அதே நேரத்தில் கர்த்தருடைய வசனம் மிக வல்லமையாய் அவருடைய உள்ளத்தில் வந்தது.

''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (II தீமோ 1:7).

அதைத் தொடர்ந்து கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் வல்லமையாய் இறங்கினர்.

உடனே அவர் அந்நிய பாஷையிலே, ''நான் கர்த்தருடைய சொத்து! கர்த்தர் என்னோடு இருக்கிறார். கர்த்தர் எனக்கு பலமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். ஆகவே சத்துருவே, என்மேல் உன் கையைப் போடமுடியாது. துப்பாக்கியை எடு'' என்று பேசிக் கட்டளையிட்டார்.

அவருடைய கண்கள் துப்பாக்கியை நோக்கவில்லை. துப்பாக்கிக்குள் இருக்கும் குண்டுகளை எண்ணிப் பார்க்கவில்லை. துப்பாக்கியால் சுட்டுவிட்டால் தனக்கு வரும் விளைவுகளை எண்ணிப் பார்க்கவில்லை.

கர்த்தரையே நோக்கிப் பார்த்தார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே சர்ப்பத்தினால் தீண்டப்பட்டபோது, யார் யார் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தார்களோ அத்தனை பேர்களையும் கர்த்தர் உயிர்ப்பித்தார். அப்படியே இந்த பக்தனும் கர்த்தரையே தன்னுடைய மனக்கண்களுக்கு முன்பாக நிறுத்தினர்.

கர்த்தர் அடைக்கலமும் பெலமும் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர் அல்லவா?

அவர் தன்னை விடுவிப்பார் என்ற விசுவாசத்தோடு கூட தொடர்ந்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தார்.

இவர் என்ன பேசுகிறார் என்பது அந்த வழிப்பறி கொள்ளைக்காரனுக்குத் தெரியவில்லை.

ஏதோ ஒரு பாஷையில் அவர் திட்டுகிறாராக்கும் என்று எண்ணி துப்பாக்கியை அவர் நெஞ்சில் இன்னும் சற்று வேகமாக அழுத்தி, ''உன்னுடைய பாக்கெட்டில் உள்ள எல்லா பணத்தையும் உடனே கொடுத்துவிடு; காலதாமதம் பண்ணாதே'' என்றான்.

இவரோ விடாமல் அந்த துப்பாக்கியைப் பார்த்து, ''இயேசுவின் நாமத்தினால் உன்னை எதிர்க்கிறேன், உன் சக்திகளை நான் அழியச் செய்கிறேன், உன் வல்லமையை குறைக்கிறேன். உனக்கு என்மேல் எந்த அதிகாரமும் இல்லை. கர்த்தர் எனக்கு பயத்தின் ஆவியை அல்ல, பலத்தின் ஆவியை கொடுத்திருக்கிறார்'' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்.

அவன் அவரை நோக்கி துப்பாக்கியினால் சுட்டான். அந்த குண்டு வெளிவரவும் இல்லை, அவரை சேதப்படுத்தவும் இல்லை.

துப்பாக்கியை திருப்பிப் பார்த்தான். ஏன் அது இயங்கவில்லை?

திடீரென்று அவனுடைய உள்ளத்தில் பயமும் அதிர்ச்சியும் வந்தது! இவரிடம் ஏதோ ஒரு, வல்லமையின் சக்தி இருக்கிறது என்று சொல்லி துப்பாக்கியை வீசிவிட்டு அப்படியே அவருடைய காலில் விழுந்தான்.

அவருடைய இந்த சாட்சி அநேக மக்களை பலப்படுத்தியிருக்கிறது.

தேவபிள்ளையே, எந்த சூழ்நிலையிலும் நீ பயப்படாதே! தாவீதை நோக்கிப் பார். அவன் கோலியாத்தைப் பார்த்து பயந்தானா? நடுங்கினானா?

தாவீது கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்திருந்தபடியினாலும், பலமுள்ள பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து இருந்ததினாலும் கோலியாத்தை எதிர்நோக்கி ஜெயங்கொள்ள முடிந்தது.

''எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது'' (II கொரி 10:4).

# சுத்தவானைக் காத்துக்கொள்!

''மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானைக் காத்துக்கொள்''
(I தீமோ 5:22).

ஆவிக்குரிய தகப்பனாகிய அப். பவுல் தம்முடைய உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, ''உன்னைச் சுத்தவானைக் காத்துக்கொள்'' என்று ஒரு ஆலோசனை கொடுக்கிறார்.

''சுத்தம் சுகம் தரும்'' என்பது பழமொழி. சுத்தம் எல்லாராலும் எல்லா காலத்திலும் விரும்பப்பட்டும் வலியுறுத்தப்பட்டும் வருகிறது.

சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருங்கள். சுத்தமே ஆரோக்கியம், சுத்தமே நல்வாழ்வு என்றெல்லாம் அரசாங்கம் ஆலோசனை கொடுக்கிறது.

சுத்தம் என்ற உடனே சரீர சுத்தத்தை நாம் நினைக்கிறோம். காலையில் எழுந்து குளிப்பது, அவ்வப்போது உடலை கழுவிக்கொள்வது, சுத்தமான ஆடைகளை அணிவது, வீட்டுப் புறங்களை பெருக்கி சுத்தமாய் வைத்துக்கொள்வது என்பதைத்தான் நாம் எண்ணுகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் நாளில் வாழ்ந்த பரிசேயர் சதுசேயர் வெளிப்புறமான சுத்தத்திற்கு மிக அதிகமான முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

சீஷர்கள் கை கழுவாமல் சாப்பிட்டபோது அவர்களுக்கு கோபம் வந்தது. ஆனால் இயேசு அவர்களைப் பார்த்து, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே என்று அழைத்தார்.

காரணம், கல்லறையின் வெளிப்பக்கம் சுத்தமாய் இருந்தாலும் உட்புறமோ நாறுகிற சதைகளினாலும், எலும்புகளினாலும், புழுக்களினாலும் நிரம்பியிருக்கிறது.

இயேசு சொன்னார்: போஜனபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் (மத் 23:25,28).

கர்த்தர் முகத்தின் சுத்தத்தைப் பார்க்கிறவர் அல்ல, இருதயத்தின் சுத்தத்தைப் பார்க்கிறவர்.

அவருடைய கண்கள் சரீரத்தின் சுத்தத்தை நோக்கிப் பார்க்காமல், உள்ளத்தில் பரிசுத்தம் காணப்படுகிறதா? உள்ளத்தில் செம்மையான கிரியை காணப்படுகிறதா? என்றே பார்க்கின்றன.

தேவபிள்ளையே, உன்னுடைய இருதயத்தில் கர்த்தர் விரும்புகிற சுத்தம் காணப்படட்டும்.

தாவீதைப் போல, தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் என்று சொல்லி ஜெபிப்போமா? (சங் 51:10).

கர்த்தர் சுத்த இருதயத்தைச் சிருஷ்டிக்கும்போது எல்லாக் காவலோடும் நம்முடைய இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

ஏனென்றால் இருதயத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்படுகிறது (நீதி 4:23)

சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள் (நீதி 22:11).

சுத்த இருதயம் தேவனை தரிசிக்கிறது.

இருதயத்தில் சுத்தம் மாத்திரமல்ல, நம்முடைய நாவிலும் சுத்தம் வேண்டும். பொய்யுரையாத சுபாவம் வேண்டும். பொருத்தனை செய்ததை நிறைவேற்றுகிற சித்தை வேண்டும்.

சுத்தமில்லாத ஏராளமான நாவுகளைக் குறித்து வேதம் சொல்லுகிறது. பொருமைகளைப் பேசுகிற நாவு, புறங்கூறுகிற நாவு, சண்டையிடும் நாவு, தீட்டுப்பட்ட நாவு, சவரகன் கத்திக்கு ஒப்பான நாவு, கபட நாவு என்று ஏராளமான நாவுகளைக் குறித்து வேதத்திலே வாசிக்கிறோம்.

தேவபிள்ளையே, உன் நாவை சுத்தமாகக் காத்துக் கொள்.

ஏசாயாவின் நாவையும் உதட்டையும் தொட்ட அக்கினி கர்த்தருக்குப் பிரியமில்லாத அழுக்குகளை சுட்டெரிக்கட்டும்! தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது (நீதி 21:23).

நம்முடைய ஆவியிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நாம் சுத்தமுள்ளவர்களாய் காணப்பட வேண்டும். அப். பவுல் எழுதுகிறார்: மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம் (II கொரி 7:11).

''உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக''(I தெச 5:23).

# எதைச் செய்தாலும்...!

''எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்'' (கொலோ 3:24).

வல்லமையான தேவ ஊழியக்காரனும் உயர்ந்த போதகர் வால்ட்டர் தன் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவம் ஒன்றைக் கீழே எழுதுகிறார்:

''கர்த்தர் என்னை வேதாகமக் கல்லூரிக்கு அனுப்பிய போது நான் மிகவும் மகிழ்ச்சியோடும் தேவனைத் துதிக்கும் துதியோடும் புறப்பட்டேன்.

அங்கேயிருந்த வார்டன் அம்மையார் என்னிடம், ''தம்பி, உனக்கு பாத்திரங்களும், சட்டிப்பானைகளும் கழுவும் பொறுப்பை தருகிறேன்'' என்றார்கள்

அவர்கள் சொன்ன அந்த வார்த்தை எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''சட்டிப்பானை கழுவி பழக்கப்பட்டவன் அல்ல, அது பெண்களின் கடமை. நான் வேதத்தை கற்றுக்கொள்ள வந்தேனே தவிர அற்ப வேலைக்காரனாக வரவில்லை. சட்டிப்பானை கழுவுவது எனக்கு விருப்பம் இல்லை அது என் ஆண்மைக்கு இழுக்கு'' என்று உறுதியாய்க் கூறிவிட்டேன்.

அதைக் கேட்டவுடனே அந்த வார்டன் அம்மையாருக்கு அளவில்லாத கோபம் வந்தது.

''சட்டிப்பானையைக் கழுவுவதை நீ விரும்பும்வரை கழுவியே தீரவேண்டும். இல்லாவிட்டால் இந்த வேதாகமக் கல்லூரியில் உனக்கு இடமில்லை'' என்று சொல்லிவிட்டார்கள்.

தன்மானம் எனக்கு தலைதூக்கியது. சட்டிப்பானை கழுவ வைக்கும் இந்த வேதாகம கல்லூரியும் வேண்டாம்; அடிமைப்படுத்தும் இந்த கிறிஸ்தவ மார்க்கமும் வேண்டாம் என்று சொல்லி, அந்த கல்லூரியைவிட்டு பெட்டி படுக்கைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு வெளியே புறப்பட்டு வந்தேன்.

வருகிற வழியிலே ஒரு எழுப்புதல் பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஒரு நிமிடம் நின்றேன்.

திடீரென்று அந்தப் பிரசங்கியார் என் பக்கமாய் திரும்பி, முரட்டாட்டம் உள்ள வாலிபனே, நீ கர்த்தரின் பலத்த கரத்தில் அடங்கியிரு என்றார்.

அந்த வார்த்தைகள் மிக வல்லமையோடு என்னை நோக்கி கடந்து வந்தன. கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் என்பதை உடனே உணர்ந்துகொண்டேன்.

மாத்திரமல்ல, கர்த்தருடைய வல்லமை என் இருதயத்தை ஊடுருவிச் சென்றதை உணர முடிந்தது. என் பின் மாற்றத்திற்காக மனங்கசந்து அழுது உடனே வேதாகம கல்லூரிக்கு திரும்பிச் சென்றேன்.

கர்த்தருடைய மகிமையான பணியின் ஆரம்பம் தாழ்மை என்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது. நான் சட்டிப்பானைகளை கழுவ ஆரம்பித்தபோது கர்த்தர் அதில் மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தார்.

கழுவும்போதே கர்த்தருடைய அன்பினால் நிரப்பப்பட்டேன். பிற்காலத்தில் ஆண்டவர் என்னை ஆசிர்வதித்து பெரிய ஊழியனாய் உயர்த்துவதற்கு அது ஒரு ஆரம்பமாய் அமைந்தது.''

இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருந்த நாட்களில் தம்மைத் தாழ்த்தி, மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் காண்பிக்கும்படி அவர் தீர்மானித்தார்.

ஆகவே அவர் செய்தது என்ன? "ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த துணியினால் துடைக்கவும் தொடங்கினார்" (யோவான் 13:5).

இஸ்ரவேல் தேசத்திலே யாரும் எளிதாக மற்றவர்களுடைய கால்களைக் கழுவி துடைக்க மாட்டார்கள். அது மிக மிக இழிவான செயலாக காணப்பட்டது.

வீட்டிலுள்ள உக்கிராணக்காரனோ அல்லது வேலைக்காரனோ அந்த வேலையைச் செய்யமாட்டான். கூலிக்காரன் கூட அதைச் செய்யமாட்டான். அடிமைகள்தான் வீட்டு வாசலிலே கிடந்து மற்றவர்களுடைய பாதங்களைக் கழுவி துடைப்பார்கள்.

இயேசு தம்மைத்தாமே தாழ்த்தினது மாத்திரமல்ல, அவர் அடிமையின் ரூபமெடுத்தார்; தாழ்மையை நமக்கு கற்றுத் தருவதற்கு சித்தமானார்.

தேவபிள்ளையே, கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக் கொள். தாழ்மையுள்ளவர்களை கர்த்தர் மேன்மைப்படுத்துகிறார். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிறார்.

மரணபரியந்தம் நம்மைத் தாழ்த்தி நமக்கு முன்மாதிரியான கிறிஸ்துவின் அடிச்சுவடுகளையே நாம் பின்பற்றுவோமாக. அந்த தாழ்மை பரலோகம் வரையிலும் உயர்வை நமக்கு தந்துகொண்டே இருக்கும்.

"கர்த்தர் உயர்ந்தவராய் இருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" (சங் 138:6).

அத்தியாயம் 10

# நம்பிக்கை இல்லை!

''நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்''
(ரோமர் 12:12).

உலகத்திற்கு நம்பிக்கை இல்லை! நம்பிக்கை இல்லாமல் தன் அழிவை நோக்கி அது தீவிரித்துக்கொண்டிருக்கிறது.

உலக ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் நம்பிக்கை இல்லாமல் கல்லறையை நோக்கியும் தங்கள் மரணநாளை நோக்கியும் தீவிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானிகளுக்கும் நம்பிக்கை இல்லை. ஆயிரக்கணக்கான அணுகுண்டுகளை செய்து வைத்துவிட்டு அது வெடிக்காமல் பாதுகாப்பது எப்படி என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

பொருளாதார நிபுணர்களுக்கு நம்பிக்கை இல்லை. ஜனத்தொகை பெருகுகிற அளவுக்கு உணவு உற்பத்தி பெருகாததினாலே உலகம் பஞ்சத்திற்கு உள்ளாகி மக்களை மக்கள் சாப்பிடும் மிலேச்சத்தனமான நாட்கள் வருமோ என்று கலங்குகிறார்கள்.

அரசியல்வாதிகளுக்கு நம்பிக்கை இல்லை. எப்போது தங்கள் அரசு விழுமோ, எப்போது புரட்சி தோன்றுமோ என்று தெரியாமல் துக்கத்தோடு இருக்கிறார்கள்.

ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கோ நம்பிக்கை உண்டு. அல்லேலூயா! அது மேன்மையான நம்பிக்கை, மகிமையான நம்பிக்கை!

இயேசு மீண்டும் வருவார். நம்முடைய கண்கள் அவரை காணும் என்ற அருமையான நம்பிக்கை நமக்கு உண்டு! அதே நம்பிக்கையிலே நாம் கர்த்தரைச் சந்தோஷமாய் எதிர்பார்க்கிறோம்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கல்லறையை நோக்கியோ அல்லது மரணநாளை நோக்கியோ ஓடுவதில்லை. பரலோகத்தை நோக்கியும், ஒளிமயமான தேசத்தை நோக்கியும், சந்தோஷத்தோடும் நம்பிக்கையோடும் ஓடுகிறோம்.

அப்.பவுல், நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள் என்று குறிப்பிடுகிறார். நமக்கு இருக்கும் அருமையான நம்பிக்கை என்ன?

நம்முடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே நாம் சந்தோஷமாய் இருக்கிறோம்!

நமக்காக கிறிஸ்து வாசஸ்தலங்களை ஆயத்தம்பண்ணி இருக்கிறார். அவர் இருக்கிற இடத்திலே நாமும் இருப்போம் என்கிற நம்பிக்கையிலே சந்தோஷமாய் இருக்கிறோம்.

நமக்காக ஜீவகிரீடம், வாடாத கிரீடம், மகிமையின் கிரீடமெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையிலே சந்தோஷமாய் இருக்கிறோம்.

கிறிஸ்து ஜெயங்கொண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதுபோல நாமும் ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களாய் அவரோடு அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருப்போம்! அந்த நம்பிக்கையிலே நாம் சந்தோஷமாய் இருக்கிறோம்.

உலகத்திற்கு நம்பிக்கை இல்லை; ஆகவே அது சந்தோஷமாய் இருக்கவில்லை.

ஒரு பழங்காலத்து கதை உண்டு. ஒரு பெரிய ராஜா மனம் கலங்கினவனாய் தன் அரண்மனை உப்பரிகையின் மேல் உலாவிக்கொண்டு இருந்தான்.

அந்த ராஜாவுக்கு விரோதமாய் தேசத்தில் கலவரம் நடந்துகொண்டிருந்தது. ராஜாவை அவரது தளபதியே கவிழ்க்க சதி திட்டங்களை தீட்டிக்கொண்டிருந்

தான். அதற்கிடையில் வெளி தேசத்து ராஜா தன்னு டைய படைகளையெல்லாம் எல்லை ஓரத்தில் குவித்துவிட் டான்.

மனம் கலங்கிக்கொண்டிருந்த ராஜா உப்பரிகையின் மேல் உலாவிக்கொண்டு இருந்தபோது கீழே ஒரு பிச்சைக் காரனை வழிப் போக்கன் உற்சாகமாய் பாடல் ஒன்றை பாடிக்கொண்டிருந்தான். அரண்மனை சேவகர்கள் அவனை விரட்டினார்கள். அவனோ அதைக்குறித்து கவலைப் படாமல் இன்னும் மிக உற்சாகமாய் அருகிலுள்ள வீடு களில் பாடி பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான்.

ராஜா அரண்மனையின் உப்பரிகையிலிருந்து மிக வேக மாக ஓடிவந்தான். அந்த பிச்சைக்காரனிடம் சென்று "நீ இவ்வளவு சந்தோஷமாய் பாடிக்கொண்டு இருக்கிறாயே. இந்த சந்தோஷத்தின் இரகசியம் என்ன?" என்று கேட் டான்.

பிச்சைக்காரன் மிகுந்த மகிழ்ச்சியோடே சொன் னான், "என் உள்ளத்தில் இயேசு இருக்கிறதினாலே நான் சந்தோஷமாய் இருக்கிறேன். அவர் எனக்குக் கொடுத்த இரட்சிப்பினாலே சந்தோஷமாய் இருக்கிறேன். அவரு டைய மாறாத பிரசன்னம் என்னை வழிநடத்துகிறபடி யினாலே சந்தோஷமாய் இருக்கிறேன்!"

"அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்" என்று தாவீது ராஜா சொல்வது எத்தனை உண்மையா னது (சங் 5:7)! தேவபிள்ளையே, நம்பிக்கையிலே சந் தோஷமாய் இருப்பாயா?

# மங்கியெரிகிற திரி!

''அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்'' (ஏசாயா 42:3).

மங்கியெரிகிற திரியை அணையாத தேவன்! அவர் அணையாதவர் மாத்திரமல்ல, பிரகாசிக்கச் செய்கிற தேவனாகவும் இருக்கிறார்.

தேவபிள்ளையே, உன்னுடைய வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார். முன்பு ஒரு காலத்தில் நீ கர்த்தருக்காக பிரகாசமாய் இருந்திருக்கக்கூடும். எரிந்து பிரகாசிக்கக் கூடிய விளக்காய் இருந்திருக்கக்கூடும். ஆதி அன்பிலே வல்லமையாய் செயல்பட்டிருக்கக்கூடும்.

ஆனால் இப்பொழுதோ பலவிதமான சோதனைகளினால் உன் உற்சாகத்தை இழந்து, ஜெப ஜீவியத்தை இழந்து மங்கியெரிந்துகொண்டிருக்கிறாயோ?

கர்த்தர் இன்றைக்கு உன்னை அனல் மூட்டி எழுப்பச் சித்தமுள்ளவராய், ''மங்கியெரிகிற திரியை நான் அணைப்பதில்லை'' என்று வாக்குக் கொடுக்கிறார்.

விளக்கிலே ஏன் திரி மங்கியெரிகிறது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அதற்கு பல காரணங்கள் உண்டு.

முதலாவது காரணம், அதிலே போதுமான எண்ணெய் இல்லாமல் இருப்பதுதான். பரிசுத்த ஆவியானவரின் நிறைவு அநுதின வாழ்க்கையில் நமக்கு இல்லாமற்போனால் ஆவிக்குரிய உள்ளான விளக்கு மங்கி எரிய ஆரம்பிக்கும்.

இன்னும் சில விளக்குகளில் திரி குள்ளமாக இருந்து எண்ணெயில் மூழ்காமல் மங்கியெரிய ஆரம்பிக்கும்.

நம்முடைய வாழ்க்கையில், உள்ளத்தின் ஆழத்தில் ஆண்டவரோடு ஆழமான ஜெப தொடர்பு கொள்ளாமல் போனால் நம்முடைய பரிசுத்த ஜீவியம் மங்கியெரிய ஆரம்பித்துவிடும்.

பரிசுத்தமும், ஜெப ஜீவியமும் மங்குவதைப்போல வேதனையான காரியம் ஒன்றுமில்லை. இதனால் அநேக ஆவிக்குரிய உன்னதத்தின் ஆசீர்வாதங்களை நாம் இழந்துபோக வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது.

இஸ்ரவேல் ஜனங்களின் பரிசுத்தம் மங்கிப்போனபோது எரேமியா தீர்க்கதரிசியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை

''ஐயோ! பொன் மங்கி, பசும்பொன் மாறி, பரிசுத்த ஸ்தலத்தின் கற்கள் சகல வீதிகளின் முனைகளிலே கொட்டுண்டுபோயிற்றே ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்களே'' என்று அவர் துக்கத்தோடுகூட புலம்பி அழுது ஜெபித்தார் (புலம் 4:1).

பரிசுத்த ஜீவியம் மங்கிப்போவதினால், தரிசனக் கண்களின் தூரப்பார்வையும் மங்கிப்போகிறது. பிரகாசமற்ற மனக்கண்கள் சோர்வை வெளிப்படுத்துகிறது.

தாவீது ராஜா சொல்லுகிறார்: ''துயரத்தினால் என் கண்கள் குழி விழுந்து போயிற்று. என் சத்துருக்கள் அனைவர் நிமித்தமும் மங்கிப்போயிற்று'' (சங் 6.7)

தேவபிள்ளையே, இந்த நாள் கர்த்தர் உனக்கு ஒரு நற்செய்தியை வாக்குத்தத்தத்தோடுகூட அறிவிக்கிறார்.

மங்கியெரிகிற உன் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்ய வல்லமையுள்ளவர் உன்னோடுகூட இருக்கிறார். உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிக்க செய்கிறவர் மங்கியுள்ள உன் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்வார்.

ஆ. 8 7

உன் ஆவிக்குரிய ஜீவியத்தை அனல்மூட்டி எழுப்புவாயாக. உன் ஜெப ஜீவியத்தை அனல்மூட்டி எழுப்புவாயாக. நீ இழந்துபோன எல்லாக் கிருபைகளையும் கர்த்தர் உனக்கு மீண்டும் தருவார்.

யோபு பக்தன் சொல்லுகிறார்: ''இதோ, தேவன் மனுஷனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்திலே பிரகாசிப்பிக்கிறதற்கும், அவர் இவைகளையெல்லாம் அவனிடத்தில் பலமுறை நடப்பிக்கிறார்'' (யோபு 33:29,30).

''ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்'' (எபே 5:14).

''கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்''
(எண் 6:25).

# அந்த வார்த்தைகள்!

''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்'' (மத் 12:34,37).

இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். இருதயத்தில் இருக்கிற எண்ணங்களும் சிந்தனைகளுமே வாயின் வழியாக வார்த்தைகளாக வெளிவருகிறது.

எண்ணங்கள் உடுத்தும் ஆடையே வார்த்தைகள் என்கிறார் ஒரு தத்துவ ஞானி.

நம் உள்ளத்தில் அன்பின் உணர்வுகள் இருக்குமென்றால், பாசத்தின் சிந்தனை இருக்குமென்றால், வெளிவரும் வார்த்தைகள் தயவோடும் மனதுருக்கத்தோடும் இருக்கும். உள்ளத்திலே கசப்புகள் இருக்குமென்றால் வாயின் வார்த்தைகள் கோபமாய் வரும்.

1963-ம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாய் இருந்த ஜான் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதற்கு பிறகு அவருடைய சொந்த சகோதரனாகிய ராபர்ட் கென்னடி ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டார்.

தெருவிலே அவர் தேர்தல் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தபோது திடீரென்று யாரோ அவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டார்கள். இரத்த பெருவெள்ளத்தில் தாங்க முடியாத வேதனையினால் அவர் துடித்தார்.

அவர் கண்கள் அமைதியாய் சொருக ஆரம்பித்தன; இரத்தம் பெருவாரியாக பீறிட்டு வெளியே வந்துகொண்டிருந்தது.

அந்த சூழ்நிலையிலே அவர் மெதுவாக தமது கண்களைத் திறந்து அருகிலுள்ள நண்பனை கூப்பிட்டு, ''எல்லாரும் பாதுகாப்பாய் இருக்கிறீர்களா? வேறு யாருக்கும் எந்த சேதமும் இல்லையே?'' என்று அன்போடுகூட விசாரித்தார்.

பாருங்கள், மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்த அந்த வேளையிலும்கூட அவருடைய உள்ளம் மற்றவர்களின் பாதுகாப்பைக் குறித்தே அக்கறையுள்ளதாய் இருந்தது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்!

கர்த்தர் பேசின அவருடைய வாயின் வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள்.

உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே மனுஷனுக்காக அன்பின் வார்த்தைகளை அவர் பேசினார். சிருஷ்டிப்பின் வார்த்தைகளைப் பேசினார்.

உலகம் உண்டாகக்கடவது என்று சொன்னபோது, உலகமும் அதிலுள்ள சகல சிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்பட்டன.

வேதம் சொல்லுகிறது, விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம் (எபி 11:3).

தேவனுடைய வார்த்தையினால் உருவாக்கப்பட்ட இந்த உலகமெல்லாம், கர்த்தர் நம்மை நினைவுகூர்ந்து அன்புடன் நமக்காக உருவாக்கியது என்பதை நாம் மறந்துபோய் விடக்கூடாது.

அவருடைய வார்த்தைகள் சிருஷ்டிப்பின் வார்த்தைகள்! மட்டுமல்ல, அவருடைய வார்த்தைகள் கிருபை நிறைந்த வார்த்தைகள், அன்பு நிறைந்த வார்த்தைகள், பாவ மன்னிப்பின் வார்த்தைகள், திடப்படுத்தும் வார்த்தைகள்!

சிலுவையில் தொங்குகிற இரட்சகரை நோக்கிப் பாருங்கள். சிலுவையிலே தொங்குகிற அந்த வேளையிலும் அவருடைய இருதயம் தெய்வீக அன்பினாலும், மன்னிப்பின் சிந்தனைகளினாலும்தான் நிரம்பி இருந்தது!

பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று அன்பான வார்த்தைகளைப் பேசினார். தாயாரைக் குறித்து அக்கறையுள்ள வார்த்தைகளைப்பேசினார். தம்மிடம் ஜெபித்த கள்ளனுக்காக பரதீசைக் குறித்து வாக்குத்தத்தமாக பேசினார்.

அவருடைய இருதயத்தில் நிறைந்திருந்ததெல்லாம் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கரிசனையும் அக்கறையும்தான்!

அவருக்குள் இருந்த அந்த வார்த்தைகளையே கர்த்தர் நமக்குள் வைக்கச் சித்தமானார். நமக்குள்ளே வாசம் பண்ணுகிறது மாத்திரமல்ல, நமக்குள்ளே அதிகாரமும் வல்லமையுமுள்ள வார்த்தைகளை ஸ்தாபிக்கும்படி அவர் தீர்மானித்தார்.

''ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்'' (யோவான் 1:1,14).

நமக்குள்ளே வாசம்பண்ணுகிற அந்த தேவ வார்த்தையானவர் நமக்குள்ளே புதிய இருதயத்தை சிருஷ்டிக்கிறார் புதிய ஆவியினால் அபிஷேகம் பண்ணுகிறார். புதிய பாடல்கள், புதிய கிருபைகளைப் பொழிந்தருளுகிறார்.

''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின'' (I கொரி 5:17).

# வேறுபாட்டின் உபதேசம்!

''கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?'' (II கொரி 6:15).

கிறிஸ்தவ உபதேசத்தில் வேறுபாட்டின் உபதேசம் முக்கியமானது. நாம் கர்த்தருக்காய் வேறுபிரிக்கப்பட்டவர்களாய், பரிசுத்த ஜனமாய் வாழவேண்டியது அவசியம்.

உலக நண்பர்களும் உலக உறவுகளும் நம் பரிசுத்த ஜீவியத்தை கறைப்படுத்திப்போடும். அதே நேரம் ஆவிக்குரிய நண்பர்களும் ஆவிக்குரிய ஐக்கியமும் நம்மை கிறிஸ்துவுக்குள் பலப்படுத்தும்.

பழங்காலத்து கவிதை ஒன்று உண்டு. வேடிக்கையான கவிதையானாலும் அதிலே ஆழமான கருத்துக்களும் உண்டு. அந்தக் கவிதையை சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

''கூடாதவர்களுடன் ஏன் கூடினாய்?
கூடத்தான் கூடினாயே? கூடங்கள் மாடங்கள் ஏன்
ஏறினாய்?
ஏறத்தான் ஏறினாயே? கீதங்கள் நாதங்கள் ஏன்
பாடினாய்?
பாடத்தான் பாடினாயே? மேளங்கள் தாளங்கள் ஏன்
வாங்கினாய்?''

இந்த கவிதை உங்களுக்குப் புரிகிறதா? புரியாவிட்டால் ஒரு சிறுகதையை கேளுங்கள்.

ஒரு நரி பூனையோடு பழக்கம் வைத்தது. இரண்டு பேரும் நண்பர்களாகி விட்டார்கள்.

மற்ற நரிகளெல்லாம் இந்த நரியைப் பார்த்து, ''பட்டணத்துப் பூனையோடு பழக்கம் வைக்காதே. உனக்கு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

எறத்தான் எறிஞயே? கீதங்கள் நாதங்கள் ஏன் பாடிஞய்?

பாடத்தான் பாடிஞயே? மேளங்கள் தாளங்கள் ஏன் வாங்கிஞய்?''

தேவனுடைய ஜனங்கள் வேறுபடுதலின் அவசியத்தை அறிந்துகொள்ள வேண்டியது முக்கியமானது. ''தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்மந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனுயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிருர்'' (II கொரி 6:16,17).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய ஏசாயா சொல்லுகிருர், ''புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களேச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களேச் சுத்திகரியுங்கள்'' (ஏசா 52:11).

தேவபிள்ளையே, கர்த்தருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட நீ வேறுபாட்டின் ஜீவியத்தின் அவசியத்தை புரிந்துகொள். நீ உலகத்தான் அல்ல, உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளும் அன்புகூராதே.

இயேசு சொன்ஞர், ''நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினலும், நான் உங்களே உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினலும், உலகம் உங்களேப் பகைக்கிறது'' (யோவான் 15:19).

அத்தியாயம் 14

# ருசித்துப் பாருங்கள்!

''கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' (சங் 34:8).

ருசித்துப் பாருங்கள்!

கிறிஸ்துவை ருசித்துப் பாருங்கள். வேத வசனங்களை ருசித்துப் பாருங்கள். கர்த்தருடைய வழிநடத்துதல்களையெல்லாம் ருசித்துப் பாருங்கள்.

நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கர்த்தரை ருசிக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர்மேல் நம்பிக்கை வைப்பீர்கள்.

தாவீது தன் வாழ்க்கை எல்லாம் கர்த்தரை ருசித்துவிட்டு தன்னுடைய நம்பிக்கையை அவர்மேல் வைத்தது மாத்திரமல்ல, கர்த்தர் நல்லவர் என்பதை திரும்பத் திரும்ப சாட்சியிடுகிறார்.

கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார் (சங் 25:8).

ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர் (சங் 86:5).

கர்த்தரை ருசித்துப் பாருங்கள். பாட்டிலில் இருக்கும் தேன், பாட்டிலுக்குள்ளேயே இருந்தால் அதன் ருசி தெரிவதில்லை.

ஆரஞ்சுப் பழத்தை தோட்டுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தால் அது புளிப்பா இனிப்பா என்று தெரிவதில்லை.

ருசிக்கும்போதுதான் ஒவ்வொன்றின் ருசியையும் அறிந்துகொள்ளுகிறோம். ருசி இனிமையாக இருக்குமென்றால் நம் மனம் மகிழ்கிறது. கசப்பாய் இருக்குமென்றால் முகத்தை சுளித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்கள் சுவையை ஆறு வகையாக பிரித்தார்கள்: இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு. இந்த ஆறு வகைகளையும் சேர்த்து அறுசுவை என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

கர்த்தரை விட்டுத் தூரமாய் போகிறவர்களுக்கு கர்த்தரைப் பற்றிய ருசி தெரியாமல், கீழ்த்தரமான மட்ட ரகமான சுவையிலேயே மனதை செலுத்துகிறார்கள்.

தகப்பனைவிட்டு தூரமாய்ப் போன கெட்ட குமாரனுக்கு தவிடுதான் ருசியாய் தெரிந்தது. தவிட்டிலே மட்ட ரகமான ஒரு தவிடுதான் பன்றிகளுக்கு போட்டு வைக்கும் தவிடு. கெட்ட குமாரனோ அதுகூடக் கிடைக்காமல் தவித்தான்.

அநேகர் கர்த்தர் கொடுக்கும் பரிசுத்தம், ஜெப ஜீவியம், விசுவாச வாழ்க்கை ஆகியவற்றை ருசி பார்க்காமல் அருவருப்பான தவிட்டைப் போன்ற உலக சிற்றின்பங்கள், உலக ஆசாபாசங்கள், உலக இச்சைகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

கெட்ட குமாரன் ஒரு நாள் தகப்பன் வீட்டைப் பற்றி நினைத்தான். தகப்பன் வீட்டிலுள்ள ருசிகரமான உணவு வகைகளைக் குறித்து அவன் சிந்தித்தான்.

தகப்பன் வீட்டிலுள்ள வேலைக்காரர்கள்கூட ருசிகரமான உணவுகளை உண்ணுவதையெல்லாம் அவன் சிந்தித்துப் பார்த்தான்.

தகப்பனண்டை திரும்பத் தீர்மானித்தான். திரும்பிய போது அவனுக்கு எத்தனை ருசிகரமான விருந்து ஆயத்த

மாக்கப்பட்டது! தகப்பனின் அன்பையும் முழுக்க ருசித்தான்!

தேவபிள்ளையே, கிறிஸ்துவண்டை பசி தாகத்தோடு ஓடி வருவாயாக!

பசியில்லாதவனால் ஒன்றையும் ருசிக்க முடியாது. எவ்வளவு சுவையான தின்பண்டங்கள் இருந்தாலும் பசி இல்லாவிட்டால் அவற்றை அவன் புறக்கணிப்பான்.

வேதம் சொல்லுகிறது: நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள் (மத் 5:6).

கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்போதெல்லாம் கர்த்தரை ருசிக்க வேண்டும். கர்த்தரிலே மனம் மகிழ்ந்து களிகூர வேண்டும். அவரை ஆடிப்பாடி ஆராதிக்க வேண்டும் என்ற வாஞ்சையோடும் தாகத்தோடும் வருவாயாக!

அப்பொழுது நிச்சயமாகவே ஆலயத்திலுள்ள பாடல்கள், சாட்சிகள், ஜீவனுள்ள பிரசங்கங்கள் எல்லாமே மிகவும் சுவையுள்ளதாய் இருக்கும்.

ஆம் தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியம் ருசிகரமானது. கர்த்தரோடு நடப்பது ருசிகரமானது. உன்னத அன்பினால் நிரப்பப்படுவது ருசிகரமானது.

மட்டுமல்ல, கர்த்தருடைய வேதபுத்தகமே நமக்கு ருசிகரமாய் மாறுகிறது. தாவீது அதை ஆவலோடு புசித்துவிட்டு எழுதுகிறார்: அது தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது (சங் 19:10)

''என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டு போனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே'' (உன் 2:4).

# பரமஈவு

''பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்'' (எபி 6:4,5).

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவானாகிய தாவீது கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்தார்.

புதிய ஏற்பாட்டிலே நாம் கர்த்தரை ருசி பார்க்கிறது மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியினாலே பரமஈவையும் ருசி பார்க்கிறோம்; இனி வரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்க்கிறோம்.

இது புதிய ஏற்பாட்டு'பரிசுத்தவான்களாகிய நமக்குக் கிடைக்கிற ஒரு பெரிய பாக்கியம் அல்லவா?

''பரமஈவை ருசிபார்த்தும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பரபஈவு என்றால் அது எந்த ஈவு?

அப்போஸ்தலனாகிய யாக்கோபு எழுதும்போது, ''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது'' என்று குறிப்பிடுகிறார் (யாக் 1:17).

பரத்திலிருந்து இறங்கி வருகிற நல்ல ஈவில் முதல் ஈவு ''இரட்சிப்பாகிய ஈவு'' ஆகும். அது தேவனுடைய ஈவு.

வேதம் சொல்லுகிறது: ''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு'' (எபே 2:8).

தேவபிள்ளையே, இந்த இரட்சிப்பாகிய ஈவை நீ பெற்றுக்கொண்டிருக்கிறாயா? உன் உள்ளத்தில் பாவ மன்னிப்பின் நிச்சயம் உண்டா? இரட்சிப்பின் சந்தோஷம் உண்டா? உன்னுடைய வீட்டில் இரட்சிப்பின் ஈவை குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டிருக்கிறார்களா?

''நீதிமான்களுடைய கூடாரத்தில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு'' என்று வேதம் சொல்லுகிறது.

''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப் 16:31).

முழு வீட்டாரும் இரட்சிக்கப்படும்போது, ''நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்'' என்று சொல்லி குடும்பமாய் கர்த்தரைச் சேவிக்க முடியும்.

பரம ஈவாக கருதப்படுகிற அடுத்த ஈவு பரிசுத்த ஆவியாகிய ஈவு!

நமக்குள்ளே தங்கும்படி அந்த உன்னத ஈவை தேவன் நமக்குக் கொடுக்க சித்தமானார். பெந்தெகொஸ்தே நாளின்போது பரிசுத்த ஆவியானவர் ஆதித் திருச்சபையின்மேல் அளவில்லாமல் ஊற்றப்பட்டார்.

அந்த பரிசுத்த ஆவியானவர் பரமஈவு மாத்திரமல்ல, ஒரு நல்ல ஈவாகவும் இருக்கிறார்.

''நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்'' (லூக் 11:13).

இரட்சிப்பாகிய ஈவும் பரிசுத்த ஆவியாகிய ஈவும் நம்மில் ஆயிரக்கணக்கான மேன்மையான ஈவுகளைக் கொண்டு வந்து விடுகிறது.

ஆவியின் வரங்களைக் கொண்டுவருகிறது. அந்த ஈவுகளெல்லாம் அளவிடப்பட முடியாத மேன்மையான பரம ஈவுகளாகும்.

அப். பவுல் அந்த ஈவுகளையெல்லாம் ருசிபார்த்துவிட்டு தாங்க முடியாத சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும், ''தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்'' என்று சொல்லி துதித்துப் பாடுகிறுர்.
(II கொரி 9:15).

தேவனுடைய பிள்ளையே, பரமஈவை ருசிபார்ப்பது மட்டுமல்ல; பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வது மட்டுமல்ல; தேவனுடைய நல்வார்த்தைகளையும் இனிவரும் உலகத்தின் டெலன்களையும் ருசிபார்க்கும்படி வேதம் அழைக்கிறது.

இனி வரும் உலகத்தின் பெலன்கள் எத்தனை மேன்மையானது, எத்தனை மகிமையானது! பத்மு தீவிலிருந்த அப்போஸ்தலனுகிய யோவான் ஆவிக்குள்ளாகி பரம ஈவை ருசிபார்க்க கர்த்தர் கிருபை செய்தார். அந்த பரலோக ஈவு எத்தனை மேன்மையானது!

''தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினுலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது'' (ரோமர் 14:17).

அத்தியாயம் 16

# முதிர்வயதிலும் பெலன்!

''அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது'' (யோசுவா 14:11).

நான் திருவள்ளூர் என்ற ஊரில் ஊழியம் செய்ய செல்லும்போதெல்லாம் மிகவும் வயதான ஒரு தகப்பனார் ஜெபிக்கும்படியாக என்னிடத்தில் வருவார். என்னைப் பார்த்து, ''தம்பி, நான் ஊழியம் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். என்னால் முடியவில்லையே'' என்று சோர்வோடுகூட சொல்லுவார்.

வயதான அருமை தகப்பன்மார், தாய்மார் சோர்வோடு இருப்பதைக் காணும்போது உண்மையாகவே என் இருதயம் வேதனைப்படுகிறது.

வேதத்திலே காலேபினுடைய வாழ்க்கையை வாசித்து தியானித்துப் பாருங்கள். அவர் எண்பத்தைந்து வயதிலும் யுத்தத்திற்கு ஆயத்தமுள்ளவராகவே இருந்தார்.

''யுத்தத்திற்கு போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது; ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலை நாட்டை எனக்குத் தாரும்;

அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; கர்த்தர் என்னோடிருப்பாரானால் கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்திவிடுவேன் என்றான்''

(யோசுவா 14:11, 12).

''மலைநாடு வேண்டும்!'' இதுதான் வயதான காலேபின் இனிமையான வாஞ்சை.

எண்பத்தைந்து வயதிலே சமவெளிகளில் சுகபோக மான ஓய்வு எடுக்க அவர் உள்ளம் ஒப்புக்கொள்ளவில்லை. தான் விரும்பியபடியே எபிரோயை சுதந்தரித்துக்கொண் டார்.

கர்த்தரை தங்கள் வல்லமையின் ஊற்றாகக் கொண்டி ருக்கிறவர்கள், அவரை தியானித்து துதித்து மகிழுகிறவர் கள் முதிர் வயதிலும் தெய்வீக பெலனோடுகூடத்தான் இருப்பார்கள்.

"கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது" என்ற கர்த்தருடைய மாறாத வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்
(சங் 103:5).

சீனாவிலே தன்னுடைய மிஷனரிப் பணியை முடித்து விட்டு திரும்பியபோது சுவிசேஷகர் பெஞ்சமினுக்கு எழு பது வயதானது. அப்படியும் அவர் இடைவிடாமல் உழைத்தார்.

எண்பதாவது வயதில் கிரேக்க மொழியை கற்றுக் கொள்ள தீவிரமாய் எழும்பினார். கிரேக்க புதிய ஏற் பாடு வாங்கி வாசித்து முடித்தார். மட்டுமல்ல தொடர்ந்து கிரேக்க மொழியைப் பயின்று அதில் பண்டித்துவமும் பெற்றார்.

தனது தொண்ணூறும் வயதில் வேதாகமக் கல்லூரிக் குச் சென்று கிரேக்க பாடத்திட்டத்தை கற்றுக்கொண் டார். கடைசிமூச்சு இருக்கும் வரையிலும் இடைவிடா மல் கிறிஸ்துவுக்காக உழைத்துக் கொண்டிருந்தார்.

ஹட்சன் டெய்லர் இந்தோசீனாவுக்கு சென்று அங்கே புதிய ஆலயங்களையும் பணித்தளங்களையும் நிறுவும்போது அவருக்கு அறுபத்தொன்பது வயது.

எண்பத்திரண்டாவது வயதில்தான் கலிலியோ தனது மாபெரும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்தார்.

''மனித குணாதிசயங்கள்'' என்ற அருமையான புத்த கத்தை எழுதும்போது தெயோவுக்கு தொண்ணூறுவயது.

அறிவும் அனுபவமும் இணைந்து கர்த்தருக்காக செயல் படும்போது அது மிகுந்த பயனுள்ளதாய் இருக்கிறது.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, வயது ஏறிக்கொண்டு போவதைக் குறித்து ஒருபோதும் கவலைப் படாதிருங்கள்!

உங்களுடைய முதிர்ந்த அனுபவங்கள் இளம் உள்ளங் களுக்கு பிரயோஜனமாய் அமையட்டும். உங்களுடைய ஆவிக்குரிய அனுபவங்கள் அநேகம் பேருக்கு சவாலாக விளங்கட்டும்.

ஒருவேளை உங்களுடைய சரீரம் பெலவீனமாய் இருந் தாலும் உங்களுக்குள்ளே வாசம் செய்யும் உயிர்த்தெ ழுந்த இயேசு இளமையானவர். ஆவியானவரும் புதிய புதிய கிருபையினால் அநுதினமும் உங்களை நிரப்புவார்.

''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியா யிருக்கிறான்'' (II கொரி 5:17).

தேவபிள்ளையே, முதிர்ந்த சமாதானமுள்ள வருஷங் களை கர்த்தர் வேதத்தில் நமக்கு வாக்களித்திருக்கிறார். ''அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமை யுமாயிருப்பார்கள்'' (சங் 92:15).

''நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்'' (சங் 91:16).

# தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்!

''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'' (பிலி 4:6).

தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்!

எத்தனை ஒரு எளிமையான, அதே நேரத்தில், ஆறுதலான வார்த்தை! தேவனுக்கு தெரியப்படுத்தும்போது உள்ளத்தின் பாரச்சுமை இறங்குகிறது! கர்த்தர்பேரில் விசுவாசம் சுரக்கிறது!

தேவனுக்கு தெரியப்படுத்தாததினாலே அநேகர் தாங்களே பாரம் சுமந்து, சுமந்து இளைத்துப்போய் விடுகிறார்கள். முடிவில் வாழ்க்கையில் தோல்வியடைகிறார்கள்.

வியாதி வருகிறதா? கர்த்தருக்கு தெரியப்படுத்துவதை ஜனங்கள் விட்டுவிட்டு வைத்தியருக்கு தெரியப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள் எந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போகலாம்? எந்த டாக்டர் பெரிய டாக்டர் என்று எண்ணுகிறார்களே தவிர பரம டாக்டரான இயேசுகிறிஸ்துவுக்கு தெரியப்படுத்துவது இல்லை.

சொத்து பாகம் பிரிப்பதில் பிரச்சனை வருகிறது. உடனே எந்த வக்கீலிடம் சென்று பேசுவது என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். திறமையான வக்கீல் யார்? உண்மையான வக்கீல் யார்? அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறார்களே தவிர, பிதாவின் வலது பாரிசத்திலே நமக்காக பரிந்து பேசுகிற கர்த்தரிடத்தில் தெரியப்படுத்துவது இல்லை.

மனக் கலக்கங்கள் வருகிறது. உள்ளத்தில் போராட்டங்கள் வருகிறது. மனோதத்துவ நிபுணர் யார்? அவரிடத்திலே சென்று தங்கள் பிரச்சனைகளை சொல்லுவோம் என்று எண்ணுகிறார்களே தவிர, கர்த்தரிடத்தில் தெரிவிக்க எண்ணுவது இல்லை.

கடன் பிரச்சனை வருகிறது. மார்வாடிக்கு தெரியப்படுத்துகிறார்கள். பணப் பிரச்சனை வருகிறது. செல்வந்தர்களை நோக்கி ஓடுகிறார்கள்

அப்.பவுல் எழுதுகிறார்: ''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்''

ஜெபமாகிய டெலிபோனை கையில் எடுத்துக்கொள்ளுங்கள் கர்த்தருடைய டெலிபோன் நம்பர் 333 என்று ஒரு ஊழியர் சொன்னார் ஆச்சரியமாய் இருக்கிறது அல்லவா? அது எரே.33:3-ஐ குறிக்கிறது. அந்த வசனம் சொல்லுகிறது, ''என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.''

தேவனுக்கு தெரியப்படுத்தும்போது கர்த்தர் நாம் அறியாததும் நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை நமக்கு அறிவிப்பார்.

மாத்திரமல்ல, நாம் தேவனுக்கு தெரியப்படுத்தும்போது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நமது இருதயங்களையும் நமது சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்.

நாம் தேவனுக்கு தெரியப்படுத்தும்போது கர்த்தர் நமக்காக வழக்காடி, யுத்தம் செய்து, யாவையும் செய்து முடிப்பார்

பழைய ஏற்பாட்டிலே எசேக்கியா ராஜாவைப் பாருங்கள். எசேக்கியாவுக்கு விரோதமாக அசீரியா ராஜாவாகிய சனகெரிப் படையெடுத்து வந்தான். மாத்திரமல்ல, சோர்ந்துபோகப்பண்ணுகிற நிருபங்களை எழுதினான். எசேக்கியா ராஜா செய்தது என்ன தெரியுமா? அந்த நிருபத்தை எடுத்துக்கொண்டு நேராக கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்து, அதை கர்த்தருக்கு முன்பாக விரித்து நிலைமையை கர்த்தருக்கு தெரிவித்தான்.

''சேனைகளின் கர்த்தாவே, கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர். கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்துக் கேளும்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும். சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகளையெல்லாம் கேளும்'' (ஏசா 37:16,17).

கர்த்தருக்கு தெரிவித்த பிறகு எசேக்கியா ராஜாவின் உள்ளத்தின் பாரம் இறங்கினது.

மாத்திரமல்ல, தேவனுக்கு தெரியப்படுத்தினதினாலே கர்த்தர் உடனே தம்முடைய தேவ தூதனை அனுப்பினார்.

அந்த தேவதூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்திற்குள் இறங்கி லட்சத்து எண்பத்தையாயிரம்பேரை சங்கரித்தான்.

பாருங்கள், தேவனுக்கு தெரியப்படுத்தினதினாலே எசேக்கியா ராஜா யுத்தம் செய்யாமல், தனது எந்த வீரரையும் இழக்காமல் யுத்தத்தில் ஜெயங்கொண்டார்.

தேவபிள்ளையே, உன்னுடைய பிரச்சனை சிறியதோ பெரியதோ தேவனுக்கு தெரியப்படுத்து. தேவ ஜனமே, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்துடனேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்!

## அத்தியாயம் 18

# மூன்று சோதனைகள்!

''மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் இந்த உலகத்தினால் உண்டானவைகள்'' (I யோவான் 2:16).

மாம்சத்தின் இச்சை!

கண்களின் இச்சை!

ஜீவனத்தின் பெருமை!

இந்த மூன்றும் சாத்தானுடைய கொடிய ஆயுதங்கள்! மிக முக்கியமான ஆயுதங்கள். ஆகவே தேவனுடைய பிள்ளைகள் இந்த மூன்று காரியங்களை எதிர்த்துப் போராடுவதில் உறுதியாய் இருக்கவேண்டும்.

இந்த மூன்று கவர்ச்சிகளை எடுத்துக்கொண்டுதான் அன்றைக்கு சாத்தான் ஏவாளை சோதித்தான்.

நன்மை தீமை அறியத்தக்க அந்த கனியை இச்சிக்கும்படி காண்பித்தான். அவள் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

''அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டாள்''

(ஆதி 3:6).

பாருங்கள்! இந்த வசனத்தை சற்று ஆழமாக கவனித்துப் பார்த்தால், அதில் கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, மாம்சத்தின் இச்சையெல்லாம் இணைந்திருக்கிறது.

இந்த சோதனையில் ஏவாளும் ஆதாமும் விழுந்ததினாலே அவர்களுக்கு எத்தனை பெரிய நஷ்டம்! எத்தனை

பெரிய இழப்பு! தேவ சமுகத்தை இழந்து, ஏதேனை விட்டு துயரத்தோடு வெளியே வந்தார்கள்.

இயேசுகிறிஸ்து உபவாசத்தோடுகூட வனாந்தரத்தில் இருந்தபோது, சாத்தான் இந்த மூன்று சோதனைகளை அவரிடத்தில் கொண்டுவந்தான். இதை நாம் மத் 4-ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். மூன்று சோதனைகளை அடுத்தடுத்து இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக வைத்தான்.

ஆனால் கர்த்தரோ ஒவ்வொரு சோதனையையும் தேவனுடைய வசனத்தினாலேயே மேற்கொண்டார். சாத்தானும் வசனத்தை உபயோகித்துப் பார்த்தான்.

அதே நேரத்தில் கர்த்தருடைய வசனமே எல்லா சோதனைகளையும் முறியடிக்க போதுமானதாய் இருந்தது!

தேவபிள்ளையே, சோதனைகளை மேற்கொள்ள கர்த்தருடைய வசனத்தை பற்றிப் பிடித்துக் கொள்வாயாக! அவருடைய வாக்குத்தத்தங்களை வல்லமையோடு செயல் படுத்துவாயாக!

சோதனை நேரத்தில் பயன்படுத்தக்கூடிய ஏற்ற வசனங்களை ஆவியானவர்தாமே அந்த நேரத்தில் உனக்குத் தந்தருளுவார்.

கர்த்தர் தம்முடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் உலகத்தையும் மாம்சத்தையும் பிசாசையும் ஜெயித்தவராய் விளங்கினார். அவரில் எந்தப் பாவமும் காணப்படவில்லை.

உலகத்தின் அதிபதி என்னிடத்தில் வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்பதே கிறிஸ்துவினுடைய சாட்சியாய் இருந்தது.

சோதனைகளில் ஜெயம் பெற்று பரிசுத்தத்தை பாதுகாத்துக்கொண்ட நம் அருமை ஆண்டவர் நமக்கும் சோதனைகளில் ஜெயம் தர வல்லவராய் இருக்கிறார்.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவம் இல்லாதவனுக்கு அவர் சத்துவத்தை பெருகப் பண்ணுகிறார்.

சோதனைக்காரன் உங்களிடத்தில் வரக்கூடும்.

தாவீதினிடத்திலே அவன் வந்து இஸ்ரவேலரை எண்ணும்படி உள்ளத்தை ஏவினான்.

யூதாஸ்காரியோத்தினிடத்தில் வந்து பண ஆசையைக் கொடுத்து தூண்டினான்.

பேதுருவினிடத்தில் அவன் வந்து கோதுமையை சுளகிலே புடைப்பதைப்போல புடைத்தான்.

அனனியா சப்பீராளிடத்திலே வந்து பொய் சொல்லும்படி தூண்டினான்.

பிசாசின் தந்திரங்கள் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், கர்த்தரோ எப்பொழுதும் நம்முடைய பட்சத்தில் இருக்கிறார். நம்மோடுகூட உலாவுகிறார். நமக்காக யுத்தம் செய்கிறார். நம்மை திடப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்: ''என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்'' (யோவான் 16:33).

''நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன்'' (வெளி 3:21).

## அத்தியாயம் 19

# பரீட்சைக்கு நில்லுங்கள்!

*''நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறிவீர்கள்'' (II கொரி 13:5).*

பரீட்சைக்கு நிற்பதை பொதுவாக யாரும் விரும்புவதில்லை. சோதனைகளையும் போராட்டங்களையும் விசுவாசிகள் தவிர்க்கவே விரும்புகிறார்கள்.

உதாரணமாக பள்ளிக்கூடத்திற்கு செல்கிற ஒரு மாணவனைப் பாருங்கள். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் முழு ஆண்டுத் தேர்வை அவன் எழுத வேண்டியது இருக்கிறது. அதற்காக இரவும் பகலும் படித்து ஆயத்தமாக வேண்டியது இருக்கிறது.

பரீட்சையில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டுமென்று முழு மூச்சோடு அதற்காகப் பாடுபட வேண்டியது இருக்கிறது.

பரீட்சையில் தோற்றுவிட்டால் ஒரு ஆண்டு காலம் வீணாகிவிடும் எடுத்த முயற்சிகள் அத்தனையும் வீணாகிவிடும். பெற்றோர்களிடமும் தலைகுனிந்து நிற்க வேண்டியது வரும்.

அதே நேரத்தில் பரீட்சையில் வெற்றி பெற்றுவிட்டால் அந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. புதிய வகுப்புக்கு உற்சாகமாய் செல்லக்கூடும்.

கிறிஸ்தவ வாழ்க்கையிலும் பல பரீட்சைகள் உண்டு.

இயேசுகிறிஸ்துவைப் பாருங்கள். அவரும் பரீட்சிக்கப்பட்டார். கர்த்தர் அந்தப் பரீட்சையை முறுமுறுப்போடு சகிக்கவில்லை. அவர் மனமுவந்து அதற்காக தம்மை ஒப்புக்கொடுத்தார்.

வேதம் சொல்லுகிறது, "இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" (மத் 4:1).

அவர் வனாந்தரத்திற்கு சென்றார் என்று வேதம் சொல்லுகிறது. அங்கு துஷ்ட மிருகங்கள் காணப்படக்கூடும். பேசுவதற்கு அங்கே ஆட்கள் யாரும் இருக்க மாட்டார்கள். முழுமையான தனிமையிலே இருக்க வேண்டியதிருக்கும்.

மட்டுமல்ல, அவர் அங்கே உபவாசமிருந்தார் என்று வேதம் சொல்லுகிறது. சரீரத்தின் பசி அவரை வாட்டி வதக்கி இருந்திருக்கும். எனினும் நமது அருமை ஆண்டவர் அந்த சோதனைகளுக்குள்ளாகவும், பரீட்சைக்குள்ளாகவும் கடந்து செல்ல முன் வந்தார்.

அது சோதனை மாத்திரமல்ல, அது ஒரு பரீட்சையுங்கூட! சாத்தான் அவரை சோதித்து பரீட்சித்துப் பார்த்தான். அங்கே அவருடைய விசுவாசம் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டது.

அந்த சோதனையை தாண்டி வந்தபோது கர்த்தர் அவருக்கு ஆவியின் வரங்களையும் வல்லமைகளையும் அளவில்லாமல் கொடுத்தார்.

அப் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, சிலரை குறிப்பிட்டு அவர்கள், "விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்" என்றுஎழுதுகிறார் (IIதீமோ 3:8)

சிலர் தங்களுக்கு விசுவாசம் உண்டு, பெரிய விசுவாசம் இருக்கிறது. மலைகளைப் பெயர்த்துவிடுவேன், சேனைக்குள் பாய்ந்துவிடுவேன் என்கிறார்கள்.

ஆனால் பரீட்சை வரும்போதோ அதற்கு நிற்காமல் ஓடிப்போய் விடுகிறார்கள.

அப். பவுல் எழுதுகிறார், ''நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள். நாங்களோ பரீட்சைக்கு நில்லாதவர்களல்லவென்பதை அறிவீர்களென்று நம்புகிறேன்''
(IIகொரி 13:5, 6).

ஆபிரகாமைப் பாருங்கள். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறார். அப்படிப்பட்ட ஆபிரகாமுடைய விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது.

ஆதி 22:1-ல் ''தேவன் ஆபிரகாமை சோதித்தார்'' என்று வாசிக்கிறோம். மூல பாஷையைப் பார்த்தால், கர்த்தர் ஆபிரகாம் உண்மையுள்ளவனாய் இருக்கிறானா என்று பரீட்சித்துப் பார்த்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே இஸ்ரவேல் ஜனங்களின் விசுவாசத்தை கர்த்தர் நாற்பது வருஷ வனாந்தர பாதையிலே பரிசோதித்துப் பார்த்தார்.

நாம் எவ்வளவுக்கு எவ்வளவு ஆவிக்குரிய ஜீவியத்திலே முன்னேறுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு விசுவாச பரீட்சையும் இருக்கும்.

இந்த பரீட்சையிலெல்லாம் கர்த்தர் நம்மை சோதித்து கீழே தள்ளிவிடுவார் என்று எண்ணிவிடவே கூடாது.

பரீட்சையின் முடிவிலே நமக்கு ஆவிக்குரிய ஜீவியத்தில் பெரிய முன்னேற்றம் காணப்படும்.

தேவபிள்ளையே, பரீட்சையிலே ஜெயங்கொண்டவனாய் முன்னேறிச் செல்வாயாக!

''உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்'' (யாக் 1:3)

## மனம்விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாய் உங்களைச் சந்திக்க கிருபைசெய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

இந்த நாட்கள் பரிசுத்த ஆவியின் பின்மாரி நாட்கள். மாம்சமான யாவர் மேலும் கர்த்தர் தம்முடைய ஆவியை ஊற்றிக்கொண்டிருக்கிறார். தேசமெங்கும் பெரிய எழுப்புதல் நடந்துகொண்டிருக்கிறது ஆவியால் நிரப்பப்படுவதும், ஆவியினால் நடத்தப்படுவதும் நமக்கு கிடைத்திருக்கிற பெரிய பாக்கியங்களாகும்.

இந்தப் புத்தகத்தை எழுத நினைத்தபோது ஒரு அருமை குடும்பத்தினர் மிக அன்போடு உதவிச் செய்ய முன்வந்தார்கள். அவர்களுடைய தியாகமான உதவியினால் இந்தப் புத்தகம் வெளியிடப்பட ஏதுவாயிற்று.

**Mr & Mrs Jeyakumar, Sandhausen,**
**West Germany**

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் சேருவதாக. கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக!

**இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது ஐம்பது பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!**

## J. சாம் ஜெபத்துரை வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 137. | கிருபை கிருபை கிருபையே! | 5 00 |
| 138. | கைவிட மாட்டார்! | 5 00 |
| 139. | வார்த்தையின் வல்லமை! | 5 00 |
| 140. | முன்னேக்கி முன்னேறிச் செல்லுங்கள்! | 5 00 |
| 141. | காத்திருக்கும் கர்த்தர்! | 5 00 |
| 142 | நானும் என் வீட்டாருமோவென்றால்! | 5 00 |
| 143. | இரக்கத்தின் தேவன்! | 5 00 |
| 144. | உன்னிடத்தில் என்ன இருக்கிறது? | 5 00 |
| 145. | எழும்பு சீயோனே! | 5 00 |
| 146. | அமர்ந்த தண்ணீர்! | 5 00 |
| 147. | ஏறெடுத்துப் பாருங்கள்! (டான் ஸ்டேன்டன்) | 5 00 |
| 148. | தேவன் நம்மோடு! | 5 00 |
| 149. | நாற்பது! | 5 00 |
| 150. | அக்கினி இறங்கட்டும்! | 20 00 |
| 151. | மனம் மகிழும்! | 5 00 |
| 152. | எரிந்து பிரகாசிக்கிற விளக்கு! | 5 00 |
| 153. | அமலேக்கை மேற்கொள்ளுங்கள்! | 5 00 |
| 154. | ஜெப தொனி! | 5 00 |
| 155. | கன்மலை நீரோடைகள்! | 20 00 |
| 156. | வழுவாதபடி காப்பவர்! | 5 00 |
| 157. | நல்லவர், வல்லவர், போதுமானவர்! | 5 00 |
| 158. | கர்த்தரின் கையெழுத்து! | 5 00 |
| 159. | பகற்காலம் இருக்குமட்டும்! | 5 00 |
| 160. | உண்டு...! உண்டு...! உண்டு...! | 5 00 |
| 161. | இம்மட்டும், இனிமேலும்! | 5 00 |
| 162. | யாக்கோபின் ஏணி! | 5 00 |
| 163. | தேடிவந்த நேசர்! | 5 00 |
| 164. | என் மீட்பர் உயிரோடிருக்கிறார்! | 5 00 |
| 165. | தேவை மேல் வீட்டு அனுபவம்! | 5 00 |
| 166. | ஆவிக்குரிய மகிழ்ச்சியின் இரகசியம்! | 5 00 |
| 167. | ஸ்தோத்திர பலிகள் ஆயிரம்! (W. டேவிட்) | 5 00 |
| 168. | பிரியமானவனே...! | 5 00 |
| 169. | ருசித்துப் பாருங்கள்! | 5 00 |

# ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 335 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அநேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

J. சாம்ஜெபத்துரை, M.A
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

